# LAABH SAMACHAR

Volume: 11 Issue : 03 JUNE 2022 Tamil & English Monthly Price: Rs. 10/-
official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

அவோ! மிளோ!! ஹொடோ!!!

## SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2022

**Conference & Exhibition**

Conference @ **V.S. Chellam Century Hall A/C** - **Date: 6 & 7.08.2022**
Exhibition @ **V.S. Chellam Saraswathy Hall A/C** - **Date: 5, 6 & 7.08.2022**

## சமூக ஊடகங்களில் நம் சேம்பரின் பதிவுகளை
## சமூக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பதிவு செய்ய

Like

**விரும்புங்கள்...**
மற்றவர்களும் விரும்புவார்கள்

Comment

**பேசுங்கள்...**
அனைவரும் கவனிப்பார்கள்

**பகிருங்கள்...**
பன்மடங்கு ஆகும்

To

SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



# சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி



18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536

METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

---

TEXMO ®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX ®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

---

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014

---

**உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அனுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |



# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சிட்கான் 2022 மாநாட்டிற்கான பணிகள் சேர்மன் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் தலைமையில், சுறுசுறுப்புடன் நடந்து வருகின்றன. மாநாட்டுப் பணிகளை திட்டமிட்டபடி செயலாற்றி வரும் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு ஜி.எஸ்.டி-யில் நாளுக்கு நாள் புதிய மாற்றங்களை செய்து வருகிறது. தொழில்முனைவோர்கள் ஒவ்வொருவரும் தங்களது தொழில் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதோடு, ஜி.எஸ்.டி-யில் ஏற்படும் மாற்றங்களையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று ஜி.எஸ்.டி. வல்லுனர்கள் அறிவுறுத்துகிறார்கள். தங்களது நிறுவனத்தின் கணக்காளர் பார்த்துக்கொள்வார் என்றில்லாமல், தொழில்முனைவோரின் விழிப்புணர்வும் அவசியம் என்று கூறப்படுகிறது. ஆகவே, நாம் கவனமுடன் செயல்படுவோம்.

ஜூன் 21, உலக யோகா தினம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு சாதாரண மனிதருக்கும் யோகா அவசியம். அதைவிட தொழில்முனைவோர் / வணிகர்களுக்கு மிகமிக தேவையான ஒன்று. தொழிலில் நாள்தோறும் சந்திக்கும் மன அழுத்தத்திலிருந்து நம்மை வெளிக்கொணர்ந்து, புத்துணர்வு அளித்து மீண்டும் நம்மை நேர்மறையான ஆற்றலுடன் இயக்குவதால் யோகா அவசியமாகிறது. ஆகவே, யோகா பயிற்சி செய்வோம். வாழ்வில் ஆனந்தம் காண்போம். அனைவருக்கும் யோகா தின நல்வாழ்த்துக்கள். நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.**

**பொருள்:** மனத்தை அதுபோன போக்குகளிற் போகவிடாமல் தீய காரியங்களுக்குப் போவதைத் தடுத்து, நல்ல காரியங்களில் ஈடுபடச் செய்வதுதான் அறிவு.

அதிகாரம் 43 — அறிவுடைமை (புத்திசாலித்தனம்) — அரசியல்

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**17.05.2022** - நமது சேம்பர்-ல் உள்ள பல்வேறு தொழில்துறை சார்ந்த உறுப்பினர்களை துறை வாரியாக அடையாளம் கண்டு குழு உருவாக்கம் செய்வது என்ற திட்டத்தின்படி, முதலாவதாக பிளாஸ்டிக் துறையில் உள்ளவர்களை மட்டும் அழைத்து குழு உருவாக்கப்பட்டு, அதில் ஒருவர் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**21.05.2022** - நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவர் திரு. E.R. குமரேசன் அவர்களின் 50வது ஆண்டு திருமண விழாவிற்கு நமது சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஆசி பெற்றனர். சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

**26.05.2022** - மதுரை மாவட்ட வணிக வரி அலுவலகத்திலிருந்த நமது சேம்பர் அலுவலகத்திற்கு, வரி குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புக் கூட்டத்திற்கு அழைப்பு வந்ததை ஏற்று, நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு வரி குறித்த கோரிக்கைகளை பதிவு செய்தனர்.

**31.05.2022** - தொழில்துறை வாரியாக குழு உருவாக்கலின், இரண்டாவதாக பேக்கேஜிங் மற்றும் பேக் துறையில் உள்ளவர்களை மட்டும் அழைத்து குழு உருவாக்கப்பட்டு, அதில் ஒருவர் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**04.06.2022** - நமது சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. சுப்பிரமணியன் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

**07.06.2022** - சேம்பர்-ன் மாதாந்திர கூட்டம் மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. ஜி.எஸ்.டி-யில் வந்துள்ள புதிய மாற்றங்கள் குறித்துப் பேச வழக்கறிஞரும், வரி ஆலோசகருமான திரு. கே. ஸ்ரீநிவாசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

**10.06.2022** - சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. K.R. ராஜேந்திரன் அவர்களின் பீமரத சாந்தி விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆசி பெற்றனர். சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

- K.K. தினேஷ்

---

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது சேம்பரின் சிட்கான் மாநாட்டு மலர் பணிகள் விறுவிறுப்புடன் நடந்து வருகின்றன. மலரில் விளம்பரம் அளிக்க விரும்பும் அங்கத்தினர்கள் எனது அலைபேசி என் 97905 75650-க்கு அழைக்கவும். இதுவரை விளம்பரம் தந்து ஒத்துழைத்த விளம்பரதாரர்களின் விளம்பரங்கள் அனைத்தும் வீடியோ வடிவில் நமது சேம்பர்-ன் யூடியூப்-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதோடு, ஒவ்வொரு விளம்பரத்திற்கும் க்யூஆர் கோடு அளிக்கப்படுகிறது. மாதிரி வடிவமாக, இந்த மாத இதழின் நடுப்பக்கத்தில், 14, 15, 16 & 17 ஆகிய பக்கங்களில் காணலாம். அவ்விளம்பரங்களில் காணப்படும் க்யூஆர் கோட்-ஐ ஸ்கேன் செய்தால், வீடியோ வடிவிலான விளம்பரத்தைக் காணலாம். உங்கள் விளம்பரமும் இதுபோல் செய்து கொடுக்க மேற்படி அலைபேசி என்-ஐ அழைக்கவும். நன்றி.

- B.S. ஜெனார்த்தனன்

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL ANAND Viking Prithvi INNER WEARS
NAIDU HALL JOCKEY INNER WEAR Poomex
MANGAI NIGHTIES RASATHE YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

B THE BABY SHOP அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை - 625 012. செல் : 98941 41402





# INDUS FINANCE LTD

A RBI Registered BSE listed NBFC

Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road, Nungambakkam, Chennai - 600 034. T : 044 - 28331310
E : contact@indusfinance.in W : www.indusfinance.in

Contact us for
All Your Financial needs*

**Property Loans**
**MSME Loans**
**Education Loans**
**Business Loans**
**Vehicle Loans**
**Life Insurance Policy Loans**
**Rental Discounting**

For More Details contact
**Mr.Kannappan V**
M : 94440 51147

*Conditions apply



## SCC Monthly Program

# Day to Day update in GST

சரக்கு மற்றும் சேவை வரியான ஜி.எஸ்.டி கடந்த 2017ம் ஆண்டு ஜூலை மாதம் அமலுக்கு வந்த நாள் முதல் இன்று வரையில் சராசரியாக நாளொன்றுக்கு ஒரு திருத்தம் செய்யப்பட்டு வந்த வண்ணம் உள்ளன. தொழில் முனைவோர்கள் அனைவரும் ஜி.எஸ்.டி-யின் புதிய மாற்றங்கள் பற்றி தெரிந்துகொள்வது அவசியமாகிறது. தொழிலுடன், ஜி.எஸ்.டி-யையும் ஒரு கண்ணாக பார்த்துக்கொள்ளும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்க முடியாது.

ஆகவே, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், மீண்டும் ஜி.எஸ்.டி பற்றிய மேலும் சில மாற்றங்கள் குறித்த விபரங்களை அறிந்து கொள்வதற்காக கடந்த 07.06.2022 அன்று மாலை 6.30 மணிக்கு சேம்பர் அரங்கில் நடத்தியது.

இந்த கூட்டத்திற்கு, வழக்கறிஞரும், வரி ஆலோசகருமான திரு. K. ஸ்ரீநிவாசன் அவர்கள் கலந்து கொண்டு ஜி.எஸ்.டி குறித்து விளக்கமளித்தார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் வரவேற்றுப் பேசினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. T.R. சரவணன் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் திரு. S.G. ஸ்ரீநிவாசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. கே. ஸ்ரீநிவாசன் அவர்களை மிக அழகாக கூட்டத்திற்கு அறிமுகம் செய்து பேச அழைத்தார்.

இதனை ஏற்று பேசி திரு. K. ஸ்ரீநிவாசன் அவர்கள் தனது உரையில், முதல் மாற்றமாக, ஜி.எஸ்.டி-யில், காம்பவுண்டிங் டீலர்கள் பதிவு செய்யும் படிவும் ஜி.எஸ்.டி.ஆர். 4-ல் B.Negative Liability என்கிற புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாகவும். இதற்கான காரணத்தையும் மிக அருமையாக விளக்கிக் கூறினார்.



இரண்டாவதாக, மே 2022 முதல், வரித்தாக்கல் செய்யும்போது, ஐந்து கோடி வரையில் குறைந்தது 2 இலக்க HSN Code-ம், ஐந்து கோடிக்கு மேல் குறைந்தது 4 இலக்க HSN Code-ம் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் தாக்கல் செய்ய இயலாது.

மூன்றாவதாக, பதிவு செய்யாத ஒரு டீலர், Refund பெற முடியாத சூழல் இதுவரை இருந்து வந்தன. தற்போது, அவர்களுக்காக தற்காலிக பயனர் அடையாளம் Temporary User ID ஐடி ஒன்றை உருவாக்கி அதன் மூலம் அவர்களும் இனி Refund பெறலாம் என்று புதிய மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நான்காவதாக, சட்டப்படி ஒரு அடையாளத்துடன், ஒருவர் பல்வேறு நிறுவனப் பெயரில் வியாபாரம் / வணிகம் செய்யலாம் என்கிற புதிய மாற்றத்தையும் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஜி.எஸ்.டி-யில், மேற்படி சமீபத்திய முக்கிய மாற்றங்களுடன் சில முக்கிய தகவல்களை அவர் அளித்தார். அதில், ஆன்லைன்-ல் ஜி.எஸ்.டி-யில் இருந்து ASMT-10 நோட்டீஸ் பெறப்பட்டால் அவசியம் ஒவ்வொரு வணிகரும் அதற்கு பதில் அளித்தே ஆக வேண்டும். தவறும் பட்சத்தில், Show Cause நோட்டீஸ் அனுப்ப நேரிடும் என்று தெரிவித்தார். இவை தவிற, ஜி.எஸ்.டி.ஆர்.-1, 3B, 2A, TDS / TCS, Interest போன்றவைகளில் நாம் கவனமாக இருக்க வேண்டிய விபரங்களை சுருக்கமாக விவரித்து தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பலரில் சந்தேகங்ளுக்கு மிக அழகாக பதில் அளித்தார். கலந்து கொண்ட சிறப்பு விருந்தினருக்கு சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவித்தது. நிறைவாக, சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அறுசுவை உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை நன்கொடை அளித்த சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் Dr. A.R. கணேசன் மற்றும் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோருக்கு நமது சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

## நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ல்

# தொழில் குழு உருவாக்கம்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் ஆயிரத்திற்கும் அதிகமானோர் உறுப்பினர்களாக உள்ளனர். அனைவரும் பல்வேறு தொழில்துறைகளில் இருந்து வருபவர்கள். நமது சேம்பர்-ஐ மேலும் வலுவாக்க, அந்தந்த தொழில்துறை சார்ந்த உறுப்பினர்களை மட்டும் தனியாக அழைத்து ஒரு குழுவாக உருவாக்கி அத்துறையினர்களில் ஒருவரை ஒருங்கிணைப்பாளராக நியமித்து, அத்துறையினருக்கான குறைகள் மற்றும் தேவைகளை கண்டறிந்து, அரசுக்கு வழியுறுத்தி தீர்வு காணுதல், நிகழ்ச்சி ஏற்பாடு செய்தல், அத்துறையில் தொழில் வாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

அதன்படி, முதல்முறையாக, நமது சேம்பர்-ல் உள்ள **பிளாஸ்டிக் துறை**யினர்களை மட்டும் அழைத்து கடந்த 16.05.2022 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்து, கூட்டத்திற்கான நோக்கத்தைப் பற்றியும் விவரித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தங்களை சுய அறிமுகம் செய்து கொண்டனர். அதோடு, தற்போதுள்ள தொழில் நிலைப்பாடு குறித்தும் சுருக்கமாக விவரித்தனர்.

இந்த கூட்டத்தில், பானு பிளாஸ்டிக் உரிமையாளர் திரு. V.R. சேகர் அவர்கள், நமது சேம்பர்-ன் **பிளாஸ்டிக் குழுவிற்கு ஒருங்கிணைப்பாளராக அனைவரின் ஒப்புதலுடன் தேர்வு செய்யப்பட்டார்.**

முன்னாள் தலைவர்கள் திரு. C.K. சேகர் மற்றும் திரு. K.K.G. பிரபாகரன் ஆகியோர் இத்துறையைப் பற்றிப் பேசினர். நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. சேம்பர் முன்னாள் தலைவர் திரு. C.K. சேகர் அவர்கள் இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்தார். அவருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

இதே போன்று, இரண்டாவதாக, **பேக்கேஜிங் மற்றும் பேக் தொழில்** துறையினரை அழைத்து 31.05.2022 அன்று கூட்டம் நடத்தியது. இதில் சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்து, கூட்டத்திற்கான நோக்கத்தைப் பற்றியும் விவரித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தங்களை சுய அறிமுகம் செய்து கொண்டனர். அதோடு, தற்போதுள்ள தொழில் நிலைப்பாடு குறித்தும் சுருக்கமாக விவரித்தனர்.

இந்த கூட்டத்தில், சவானி ஸ்கிரீன் உரிமையாளர் திரு. B.R. சேகர் அவர்கள், நமது சேம்பர்-ன் **பேக்கேஜிங் மற்றும் பேக் குழுவிற்கு ஒருங்கிணைப்பாளராக அனைவரின் ஒப்புதலுடன் தேர்வு செய்யப்பட்டார்.** இவருடன், காயத்ரி ஸ்கிரீன் திரு. S.R. நாகராஜன் **அவர்கள் இணை ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்யப்பட்டார்.**

முன்னாள் தலைவர்கள் திரு. C.K. சேகர் மற்றும் திரு. K.K.G. பிரபாகரன் ஆகியோர் இத்துறையைப் பற்றிப் பேசினர். நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நான்-ஓவன் மற்றும் காட்டன் பேக் சங்கத்தின் சார்பாக இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வமைப்பிற்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.





Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.



# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE




தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.

Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com







# மதுரை மாவட்ட GST வணிக வரி குறைதீர் கூட்டத்தில் நமது சேம்பர்-ன் கோரிக்கைகள்

மதுரை வணிக வரித்துறையில் இருந்து நமது சேம்பர் அலுவலகத்திற்கு, வரி குறித்த சிறப்புக் கூட்டத்திற்கு அழைப்பு வந்ததை ஏற்று நமது சேம்பர் நிர்வாகிகள், 26.05.2022 அன்று, மதுரை அரிசி ஆலை அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு ஜி.எஸ்.டி வரி செலுத்துவதில் உள்ள குறைபாடுகளை களைய சில முக்கிய கோரிக்கைகளைத் தெரிவித்தனர். அதன்படி...

- ஜி.எஸ்.டி. போர்டலில், வரி செலுத்தனரின் குறைகள் மற்றும் விளக்கங்களை தெரிவிப்பதற்கு Grievences Column ஒன்றை உருவாக்க வேண்டும்.
- ஜி.எஸ்.டி. Cash Ledger-ல் உள்ள ரொக்க பரிவர்த்தனைகளை அந்தந்த உறுப்பினர்களின் / வணிகரின் அரசுத்துறை கணக்கில் செலுத்தியதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ஜி.எஸ்.டி. Input Tax Credit Adjustment செய்ய முடியாத பட்சத்தில், Refund உரிய காலத்தில் கிடைத்திட ஆவன செய்ய வேண்டும்.
- உறுப்பினர்களின் / வணிகர்களின் போதிய விழிப்புணர்வின்மையின் காரணமாக ஏற்படும் சிறு பிழைகளுக்கு அபராத தொகை வசூலிக்கக் கூடாது.
- ஜி.எஸ்.டி.என் போர்டலில் உள்ள HSN Code, 14 முதல் 20க்குள் அனைத்து பொருட்களையும் உள்ளடக்கிய வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

இந்த கூட்டத்தில், சேம்பர் சார்பாக, பேசிய, பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோரின் மேற்குறிப்பிட்ட வேண்டுகோள்களை அரசு அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர். இதனை மத்திய வரி அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்தனர். கூட்டத்தில், இணைச் செயலாளர் திரு. J.S. சாயிஜீவன், செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. L.B. அசோக் குமார் ஆகியோர் பங்கேற்றனர்.


பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"நாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337


Prop.: B.S. Rajan
• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633



விமானத்தில் 5 நாட்கள்
காசி
யாத்திரை
காசி, கயா
புத்தகயா
அயோத்தி
அலகாபாத்
கோவில்களின் தரிசனம்
பிரயாக்ராஜ் (திரிவேணி சங்கம்), விசாலாட்சி, காசி விஸ்வநாதர், அண்ணபூரணி, காலபைரவர், துளசி மானஸ் மந்திர், துர்கா மந்திர், சங்கட மோட்சன் அனுமன், சோலி மாதா மந்திர், விஷ்ணு பாதம், படா அனுமன், மஹாபோதி தரிசனம் உட்பட இன்னும் பல கோவில்கள் தரிசனம்
PACKAGE INCLUDES
• சென்று வர விமான டிக்கெட்
• 3 ஸ்டார் ஹோட்டல்
• மூன்று வேளை உணவு
• படகு/ ஆட்டோ கட்டணம்
• A/c வாகனம்
• மினரல் வாட்டர்
• காபி/டீ, தமிழ் கைடு
• GST வரி
5 days Flight Trip
Rs. 33,000/-
Per Person
புறப்படும் தேதிகள்
21-07-2022
21-08-2022
PACKAGE EXCLUDES
தரிசன டிக்கெட், நுழைவு கட்டணம்
புரோகிதர் தட்சணை, பூஜை செலவுகள், கைடு டிப்ஸ்
சென்னை to சென்னை
www.vedhavalliholidays.com
BOOK NOW
99430 31237
Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking
VH VEDHAVALLI HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
TIRUNELVELI • MADURAI • CHENNAI

# MSME தினமா?...

## எதற்கு கொண்டாடப்படுகிறது?

இந்திய உற்பத்தித் துறையின் முதுகெலும்பாக MSME நிறுவனங்கள் இருக்கின்றன. இத்துறை, இந்திய வர்த்தகச் சந்தையில் பெரிய அளவிலான ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா மட்டும் அல்லாமல் உலகின் அனைத்து நாடுகளிலும் MSME நிறுவனங்கள் பெரிதும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணமாக 2020 கொரோனா தொற்று மற்றும் லாக்டவுன் மூலம் இந்தியாவில் இருக்கும் MSME நிறுவனங்கள் அதிகளவிலான வர்த்தகப் பாதிப்பை எதிர்கொண்ட நிலையில், MSME க்களை மீட்க மத்திய அரசு 75000 கோடி அளவிலான கடன் திட்டத்தை அறிவித்தது. அதற்கு விரைவான ஒப்புதல் மற்றும் பணப்பட்டுவாடா எனப் பல மாற்றங்கள் கொண்டு வந்தன. இதன் மூலம் MSME துறையின் முக்கியத்துவத்தை உணரலாம். இளம் தொழில்முனைவோர், புதிய தொழில்நுட்பம், புது தொழில்கள் என இத்துறையில் உருவாகிறது.

சர்வதேச சிறு வர்த்தக அமைப்பின் தரவுகள் அடிப்படையில் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 70 சதவீத வேலைவாய்ப்பும், 50 சதவீத ஜி.டி.பி-யும் MSME நிறுவனங்கள் வாயிலாகத் தான் வருகிறது. ஒரு பக்கம் MSME சிறுமையாகப் பார்க்கப்பட்டாலும் நாட்டின் பெரும் பகுதி வேலை வாய்ப்பு மற்றும் வர்த்தகத்தை MSME நிறுவனங்கள் தான் உருவாக்குகிறது.

MSME நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து 74வது ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில், ஜூன் 27ம் தேதி சர்வதேச MSME தினமாக (International MSMEs Day) கொண்டாட அறிவித்தது. இதன் மூலம் கடந்த 5 வருடங்களாக சர்வதேச MSME தினம் (International MSMEs Day) கொண்டாடப்பட்டு வருகிறது.

# வருமான வரி தாக்கல் - வருகிறது TDS

நிதியாண்டிற்கான வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யாத நபர்களுக்கு அதிகமான TDS பிடித்தம் செய்ய வகை செய்யும் நடவடிக்கைகளை வருமான வரித்துறை மேற்கொண்டுள்ளது. 2020-21 நிதியாண்டிற்கான வருமான வரிக் கணக்கை ITR தாக்கல் செய்யாத நபர்களில் நீங்களும் இருந்தால் நீங்கள் வரி தாக்கல் செய்யாதவர்களின் பட்டியலில் இருப்பீர்கள். இதன்மூலம் நீங்களும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யாதவராக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு உங்கள் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும். **TDS எனப்படும் மூலத்தில் இருந்து பிடிக்கப்படும் தொகை அதிகமாக இருக்கும்.**

## இறக்குமதி செய்யப்படும் காகித பொருட்களை அக்டோபர் 1-ம் தேதி முதல் கட்டாயம் பதிவு செய்யவேண்டும்

இறக்குமதி செய்யப்படும் காகித பொருட்களை அக்டோபர் 1-ம் தேதி முதல் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்று வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகம் நேற்று அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

செய்தித்தாள், கையால் தயாரிக்கப்பட்ட காகிதம், சுவரொட்டிகள், லித்தோ மற்றும் ஆஃப்செட், டிஷ்யு, கார்பன், கழிப்பறை காகிதம், கணக்கு புத்தகங்கள், லேபிள் ஆகியவற்றை இறக்குமதி செய்யும்போது அவற்றை பதிவு செய்ய வேண்டும். கரன்சி காகிதம், காசோலை காகிதம் உள்ளிட்டவற்றுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து முறைகேடாக காகிதம் இறக்குமதி செய்யப்படுவதாக, உள்நாட்டு காகிதத் தொழிற்சாலை அளித்த புகாரையடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்திக்கான இந்தியா, தற்சார்பு இந்தியா இயக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில், இம்முடிவு இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காகிதத்தை இறக்குமதி செய்பவர் 500 ரூபாய் பதிவுக் கட்டணம் செலுத்தி ஆன்லைன் மூலம் பதிவு எண்ணைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

## நாட்டின் உயரிய விருதான பத்ம விருது - *விண்ணப்பம் செய்யலாம்*

2023 குடியரசு தினத்திற்கு வழங்கப்படவிருக்கும் பத்ம விருதுகள் ஆன்லைன் விண்ணப்பித்தல் / பரிந்துரைகள் 1-ம் தேதி மே, 2022 தொடங்கி நடைபெற்று வருகிறது. நாட்டின் உயரிய சிவிலியன் விருதுகளான பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தையொட்டி அறிவிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய மத்திய அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த விருதுகளைப் பெறத் தகுதியானவர்கள் தாங்களாகவே விண்ணப்பிக்கலாம் என்ற நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. பல்வேறு துறையினர்கள் இந்த விருதினை பெற விண்ணப்பிக்கலாம். நமது தொழில்துறையினரும் விண்ணப்பிக்கலாம். சாதனையாளர்களை மற்றவர்களும் விருதுக்கு பரிந்துரைக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க, இணையதள முகவரி : https://padmaawards.gov.in விருது பற்றிய விபரங்கள் மற்றும் விதிமுறைகள், இணையதள முகவரி : https://padmaawards.gov.in/AboutAwards.aspx

விண்ணப்பம் கடைசி நாள்: 15 செப்டம்பர் 2022

Ministry of Micro,Small & Medium Enterprises

# New Guidelines of Micro & Small Enterprises Cluster Development Programme (MSE-CDP)approved

Posted On:27 MAY 2022 4:16PM by PIB Delhi

The Government has approved New Guidelines of Micro & Small Enterprises Cluster Development Programme (MSE-CDP), which will be implemented during 15th Finance Commission Cycle(2021-22 to 2025-26). The scheme aims at enhancing the competitiveness and productivity of Micro &Small Enterprises by undertaking interventions such as:

**Common Facility Centers (CFCs):** The central government grant will be restricted to 70% of the cost of project from Rs. 5.00 crore to Rs. 10.00 crore and 60% of the cost of project from Rs. 10.00 crore to Rs. 30.00 crore. In case of NE & Hill States, Island territories, Aspirational Districts, government grant will be 80% of the cost of project from Rs. 5.00 crore to Rs. 10.00crore and 70% of the cost of project from Rs. 10.00 crore to Rs. 30.00 crore. The project for CFC with project cost more than Rs. 30.00 crore shall also be considered but the Government assistance would be calculated by taking into account the maximum eligible project cost of Rs.30.00 crore.

**Infrastructure Development:** The central government grant will be restricted to 60% of the cost of project from Rs. 5.00 crore to Rs. 15.00 crore for setting up of new Industrial Estate /Flatted Factory Complex and grant will be 50% of the cost of project from Rs. 5.00 crore to Rs. 10.00 crore for up-gradation of existing Industrial Estate / Flatted Factory Complex. Incase of NE & Hill States, Island territories, Aspirational Districts, grant will be 70% of the cost of project from Rs. 5.00 crore to Rs. 15.00 crore for setting up of new Industrial Estate /Flatted Factory Complex and 60% of the cost of project cost from Rs. 5.00 crore to Rs. 10.00crore for up-gradation of existing Industrial Estate / Flatted Factory Complex. The project for ID with project cost more than Rs. 10.00 crore/15.00 crore can also be considered but the government assistance would be calculated by taking into account the maximum eligible project cost of Rs. 10.00 crore/15.00 crore.

The New guidelines of MSE-CDP are available on the website of the Office of DC(MSME).

*********

## குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு மத்திய அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

**ஆங்கிலத்தில் மேற்கூறிய விபரங்களை தமிழில் சுறுக்கமாக காணலாம்.**

**1. பொது வசதி மையங்கள்:** ரூ. 5 கோடி முதல் ரூ. 10 கோடி வரையிலான திட்டச்செலவில் மத்திய அரசு மான்யம் 70 சதவீதமாகவும், ரூ. 10 கோடி முதல் ரூ. 30 கோடி வரையிலான திட்டச்செலவில் 60 சதவீதமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மற்றும் மலைப்பகுதி மாநிலங்கள், தீவுப்பிரதேசங்கள், முன்னேற்றத்தை விரும்பும் மாவட்டங்களுக்கான மானியத்தொகை ரூ. 5 கோடி முதல் ரூ. 10 கோடிவரையிலான திட்டச்செலவில் 80 சதவீத அளவுக்கும், ரூ. 10 கோடி முதல் ரூ. 30 கோடி வரையிலான திட்டச்செலவில் 70 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**2. கட்டமைப்பு மேம்பாடு:** புதிய தொழில் பேட்டைகள் / அடுக்குமாடி தொழில் வளாகங்களை அமைப்பதற்கான மானிய தொகையை அரசு நிர்ணயித்துள்ளது.

**தகவல்**

சட்ட அளவீட்டுச் சட்டம், 2009 குறித்த தேசியப் பயிலரங்கில் உரையாற்றிய மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் அவர்கள், நுகர்வோருக்கு அநீதி இழைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வது நமது கூட்டுப் பொறுப்பாகும். எடைகள் மற்றும் அளவீடுகளின் அளவுதிருத்தம் செய்யப்படும் இடங்களில் ஏதேனும் தவறு நடந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அனைத்து அளவீட்டு கருவிகளும் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்பட்டு முத்திரையிடப்பட வேண்டும் என்று 'கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில்' குறிப்பிட்டுள்ளதை தெரிவித்தார்.





Sathyabama catering
We serve happiness!

**சிட்கான் 2022 மாநாடு மலரில் விளம்பரம் அளிக்கும் அனைவருக்கும்**




GEO Arts
GEO DIGITAL PRESS

**வீடியோ வடிவிலான விளம்பரங்கள் அளிக்கப்படுகிறது.**







**அந்த விளம்பரங்கள் வீடியோ வடிவில் காண கீயூ ஆர் கோடும் அளிக்கப்படுகிறது.**

SHREE SANADHANA GOSHALA
MADURAI

Jeyakumar
Managing Partner
91 93459 92444
91 98659 92444
Sevensea International
Tours & Travels
11-A, Priya Complex, Kuruvikkaran Salai, Near Aravind Eye Hospital, Madurai - 20.
E-mail : sevenseatravels@gmail.com
7seaholidays@gmail.com
www.sevenseatravels.in
Tel : 0452 - 2521098, 4250175

**அவை மினி மின் இதழாகவும் தயாரிக்கப்பட்டு வருகிறது.**

SALFA INDUSTRIES

SAIBABA AGENCIES

**அதன் மாதிரி விளம்பர வடிவமைப்பை தற்போது பார்க்கிறீர்கள்.....**

THA₹AM ASSOCIATES



VENKAT SCREEN

SNVM
MATRIC HIGHER SECONDARY SCHOOL

சிட்கான் 2022 மாநாடு மலரில் விளம்பரம் அளிக்கும் அனைவருக்கும்

PANDIAN
PERFORMANCE CHEMICALS

SHREE SIVA BALAJI STEELS
JSW Shoppe

வீடியோ வடிவிலான விளம்பரங்கள் அளிக்கப்படுகிறது.

பிரார்த்தனா ஆயுர்வேத ஹெல்த் சென்டர்
டாக்டர். T.M. பிரசன்ன குமார்
B.A.M.S.,M.D.,M.sc(psy)D.V.M.,




அந்த விளம்பரங்கள் வீடியோ வடிவில் காண கீயூ ஆர் கோடும் அளிக்கப்படுகிறது.

ADDAS
The King of Kitchen

Delta
Green Science

அவை மினி மின் இதழாகவும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

DASU
SINCE 1993

KUTTUVA
SILICATES
PRIVATE
LTD.

அதன் மாதிரி விளம்பர வடிவமைப்பை தற்போது பார்க்கிறீர்கள்.....

உங்க வீட்டிலேயும் வருமே தீர்த்தம்
Theertham
The Best Water Solutions

BALSU'S
SUCCESS ACADEMY

## ஜூலை 1 முதல்
# பிளாஸ்டிக் கட்டுப்பாடுகள்

வரும் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் இனி நாட்டில் அனுமதிக்கப்படாது. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) உற்பத்தியாளர்கள், கடைக்காரர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் என்று அரசாங்கம் கருதும் அத்தகைய பொருட்களின் மீதான தடை குறித்து இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிவித்தது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் என்பது, பலூன்கள், கொடிகள், மிட்டாய்கள், ஐஸ்கிரீம் மற்றும் இயர்பட் ஆகியவைகளில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் குச்சிகள், அலங்காரத்தில் பயன்படுத்தப்படும் தெர்மகோல், தட்டுகள், கோப்பைகள், கண்ணாடிகள் மற்றும் கட்லரி போன்ற பொருட்கள், இனிப்புப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் பிலிம்கள் மற்றும் பேக்கிங் பிலிம்கள், அழைப்பிதழ் அட்டைகள், 100 மைக்ரானுக்கு குறைவான தடிமன் கொண்ட சிகரேட் பாக்கெட்டுகள், கிளறிகள் மற்றும் பிளாஸ்டிக் பேனர்கள் இவை அனைத்தும் வரும் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

120 மைக்ரானுக்கு குறைவான தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளும் டிசம்பர் 31-ம் தேதி முதல் நிறுத்தப்படும்.

இந்தியாவில் 2019-20ம் ஆண்டில் 34 லட்சம் டன்களுக்கும் அதிகமான பிளாஸ்டிக் கழிவுகளும், 2018-19ம் ஆண்டில் 30.59 லட்சம் டன்களுக்கும் அதிகமான பிளாஸ்டிக் கழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

பிளாஸ்டிக் சிதைவதில்லை, அதன் விளைவாக, பல்லாயிரம் ஆண்டுகளாக அவை புதைக்கப்பட்ட அதே நிலப்பரப்பில் உள்ளது. அதே நேரத்தில், செயல்பமுறையின் போது நச்சுப் புகை மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடுவதால் பிளாஸ்டிக் எரிக்க முடியாது. எனவே மறுசுழற்சி செய்வதைத் தவிர, பொருளின் சேமிப்பு மட்டுமே சாத்தியமான தீர்வாக உள்ளது.

# PLASTIC
# Marking or labelling

(1) Each plastic carry bag and multi-layered packaging shall have the following information printed in English namely, -
a. name, registration number of the manufacturer and thickness in case of carry bag;
b. name and registration number of the manufacturer in case of multi-layered packaging; and
c. name and certificate number [Rule 4(h)] in case of carry bags made from compostable plastic
(2) Each recycled carry bag shall bear a label or a mark "recycled" as shown below and shall conform to the Indian Standard: IS 14534: 1998 titled as "Guidelines for Recycling of Plastics", as amended from time to time;




**NOTE:** PET-Polyethylene terephthalate, HDPE-High density polyethylene, V-Vinyl (PVC), LDPE Low density polyethylene, PP-Polypropylene, PS-Polystyrene and Other means all other resins and multi-materials like ABS (Acrylonitrile butadiene styrene), PPO (Polyphenylene oxide), PC (Polycarbonate), PBT (Polybutylene terephalate) etc.

Each carry bag made from compostable plastics shall bear a label "compostable" and shall conform to the Indian Standard: IS or ISO 17088:2008 titled as Specifications for "Compostable Plastics".

## Responsibility of retailers and street vendors-

(1) Retailers or street vendors shall not sell or provide commodities to consumer in carry bags or plastic sheet or multilayered packaging, which are not manufactured and labelled or marked, as per prescribed under these rules.
(2) Every retailers or street vendors selling or providing commodities in, plastic carry bags or multilayered packaging or plastic sheets or like or covers made of plastic sheets which are not manufactured or labelled or marked in accordance with these rules shall be liable to pay such fines as specified under the bye-laws of the local bodies

- CPCB




STEP IN & BUY
at Madurai
VILLAKKUTHOON BAZAAR
B Alankar
Next to RAMRAJ Showroom

Just Born..
- Baby Wears
- Joblas
- Gift Dress Packs
- Quick Dry Towels
- All Baby Products & Accessories
280, Kamarajar Salai,
Villakkuthoon,
Madurai-625 009.
Cell : 98941 41402

# சௌராஷ்ட்ர சமூக கலாச்சார வழிகாட்டி நூல்

'கிருஷ்ண யஜுர் வேத ஆபஸ்தம்ப ஸுத்ர சௌராஷ்டிரா சமூக கலாச்சார' நூலொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'கோ³த்துர கே⁴ரு நாவு' அகராதி என்ற சீரமைக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பான 'கோத்ர குடும்ப பெயர்' அகராதி, சாகித்ய அகாடமி பாஷா சம்மான் என்ற உயரிய விருது பெற்ற முன்னாள் நூலகர் **கே.ஆர். சேதுராமன்** அவர்களால் எழுதப்பட்ட நூல் இரண்டாவது பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு தென்னிந்திய கோவில் ஆய்வுத்திட்டம் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர் திரு. அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் அணிந்துரை அளித்துள்ளார்கள். தமது அணிந்துரையில் சௌராஷ்ட்ரா சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மக்களும் இந்த நூலை ஒரு பொக்கிஷமாக கருதி கண்டிப்பாக வாங்கி படித்து பாதுகாத்து வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது இந்நூலின் முக்கியத்துவமானது.

நூலாசிரியர் திரு. சேதுராமன் அவர்கள் இதற்கு முன்பு 'எமனை வென்ற நாயகி', 'ஸ்ரீ தியாகராஜ வெங்கட்ரமன சரித்திரம்', 'சேதுராமன் சௌராஷ்ட்ர மொழி அகராதி' மேலும் 'புகழ்பெற்ற தமிழ்நாட்டில் சௌராஷ்ட்ரர் முழு வரலாறு' ஆகிய நூலையும் எழுதி பதிப்பித்துள்ளார்.

இந்நூலில் சௌராஷ்டிர மொழி பேசும் மக்கள் மொத்தம் 64 கோத்திரங்களில் இருந்தாலும் தற்போது 40 கோத்திரங்கள் கூடிய சுமார் 567 குடும்பப் பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. 24 கோத்திரங்கள் கூடிய மக்கள் வட நாட்டிலோ அல்லது ஆந்திர மாநிலங்களில் தங்களுடைய தனித்தன்மையை இழந்து அந்த மக்களுடன் கலந்து இருக்கலாம் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் அனைத்து கோத்திரங்களுக்குரிய நட்சத்திரம், தேவதை, கணம், வாகனம், பட்சி, மரம், வான் ஆரிஷம் ஆகியவைகளை தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ் வரிசைப்படி வீட்டு பெயர்களையும் கோத்திரங்களையும் தொகுத்துள்ளார். மதுரையில் சௌராஷ்ட்ரா சமூக வீடுகளில் திருமண விசேஷங்கள் நான்கு நாட்கள் நடைபெற்றது எனவும் அப்போது கல்யாண வீட்டின் சுவரில் தேரில் குல கோத்திர ரிஷி அமர்ந்து வரும் காட்சியானது செம்மண்ணால் சித்திரம் தீட்டப்பட்டிருக்கும் என்றும், சித்திரத்தின் முன்னிலையில் அனைத்து விசேஷங்களும் சம்பிரதாய வேத சாஸ்திர முறைப்படி நடைபெற்று மணமக்களை ஆசீர்வதிப்பதாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சௌராஷ்ட்ர சமூகத்தினரின் வீட்டு பெயர்கள் மற்றும் கோத்திரங்களை அவர்கள் வீட்டு வாத்தியார் புரோகிதர் மூலமாக மக்கள் அறிந்து வருகிறார்கள். ஆனால் சௌராஷ்ட்ர புரோகிதர்கள் குறைந்து வருவதால் இதுபற்றி விஷய ஞானம் உள்ளவர்கள் குறைந்து வருகிறார்கள். சமயத்தில் இந்த புத்தகம் நமது சமூகத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

148 பக்கங்களாக உள்ள இந்த நூல் ரூபாய் 200 என்ற விலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை வாங்க விரும்புவோர் நூலாசிரியர் திரு. சேதுராமன் அவர்களை 98862 50561 என்ற அலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு வாங்கிக்கொள்ளலாம். மதுரையில் தேவைப்படுவோர் ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் வேத பாடசாலை ஆசிரியர் திரு. கே.ஆர். ராமாச்சாரி அவர்களை 94421 47694 அலைபேசியில் தொடர்புகொண்டு புத்தகத்தை வாங்கலாம்.



சாகித்ய அகாடமி பாஷா சம்மான் விருது பெற்ற நூல் ஆசிரியர் கே.ஆர். சேதுராமன்



– திம்மா. பிரகாஷ் குமார்

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com







தமிழக அரசு கடைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களை 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்க அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதி 3 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், 2019ம் ஆண்டு ஜுன் மாதம் தமிழக அரசு முதன் முறையாக இந்த சட்டத்தை 3 ஆண்டுகளுக்கு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. (இதனை நமது லாப் ஸமாச்சார் இதழில் வெளியிட்டுள்ளதை மேலே காணலாம்). கொரோனா காரணமாக இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. தற்போது மீண்டும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு, பத்து அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட உணவகங்கள், கடைகள், நிறுவனங்களுக்கு இது பொருந்தும். டாஸ்மாக், தேநீர் கடைகள், சிறு உணவகங்களுக்கு இந்த நடைமுறை பொருந்தாது.

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499
EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

பிறந்த நாள் காணும் சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

